*News and Articles in Tamil and English Please send them to:*

THE EDITOR,

The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

# THE MORNING STAR

Registered as a Nespaper at the General Post Office, Sri Lanka

Under No. Q/ J / 104 / News / 80

*Established : 1841 : A Christian Weekly Published Every Friday*

Vol: 156 Jaffna, Friday 10. February 1995 No. 06

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island : Rs 100/-
*For Advertisements*

*Apply to:*
THE MANAGER

The Morning Star,
Diocesan Office,
Vaddukoddai

## Ecumenical Worship Service

A beautiful well attended ecumenical Holy Communion Service was conducted to mark the Unity week by the Jaffna Christian Union,at St.Peter's Church Jaffna The service was led by the Revd A. Jeyakumaran, Secretary of the Jaffna Diocese of the Church of South India. He was assisted by Revd. C Nesakumar of the Anglican Church and Sevak Sam Alfred. The lessons were read by messers. R Gurupatham and Gnanponraja An appealing and meaningful message was delivered by the Revd. Father S. J Emmanuel, Rector of St Francis Xavier Seminary. He based his sermon on "the high priestly prayer of our Lord Jesus Christ." He said that the Kingdom of God should be our aim and goal. He stressed that there should be a reformation in all our churches towards fuller Unity. Special sacred songs were sung by the students of Christian Theological Seminary, Chunnakam and the choir of St- Peter's Church Jaffna The service was followed with a fellowship tea

## Bullock Cart Ride to the Campus

The senior students of Jaffna University ordered all freshers to get off their push bicycles and walk down the drive from the main gate as part of the ragging. Two freshers disobeyed. Result-their bicycles were damaged. The following day they came in a bullock cart as an expression of their protest. The seniors felt insulted!

## Cut off marks for 1994/95 University Entrance Released

The University Grants Commission releases the minimum marks needed to enter the Universities on the basis of 1993 G. C. E. A/L examinations. All together fifty thousand were qualified to enter the various Universities but only 9013 students were selected by the Grants Commission The minimum marks needed this year is 10 to 20 marks more than that was required last year. Many students who obtained high grades but not selected are disappointed The following table compares the total marks in four subjects required to gain admission to the various Faculties, from three districts

| Faculty | No admitted | Minimum Marks Required | | |
|---|---|---|---|---|
| | | Colombo | Jaffna | Trincomallee |
| Medicine | 871 | 291 | 284 | 239 |
| Dental | 84 | 289 | 283 | 238 |
| Vetinary | 74 | 288 | 282 | 238 |
| Agriculture | 352 | 275 | 274 | 237 |
| Bio Science | 693 | 272 | 267 | 231 |
| Engineering I | 635 | 289 | 290 | 237 |
| Engineering II | 126 | 283 | 284 | 229 |
| Quantity Surveying | 50 | 281 | 281 | 225 |
| Physical Sc | 1180 | 246 | 249 | 189 |
| Management | 643 | 288 | 282 | 271 |
| Commerce | 882 | 269 | 269 | 241 |
| Arts | 3164 | 253 | 253 | 253 |
| Architecture | 54 | 233 | 208 | --- |
| Law | 205 | --- | ---- | --- |

The Government has decided to revise the G. C. E. A/L syllabus for those sitting for the exams in 1997 i. e Those who are admitted to A/L classes this year. This revision is done after a lapse of 15 years

## PRABA MEETS THE FOREIGN MEMBERS OF PEACE MONITORING TEAMS

On Sunday 5th, the Leader of theLTTE, Mr. V. Prabaharan, Political Adviser, Dr. Anton Balasingam and the Political wing Leader,Mr.S.P.Thamilchelvan met the foreign members of the four delegations appointed to monitor the cessation of hostilities. The four leaders of the monitoring teams are, Mr.Ordinholm and Mr. Jones Eppirielson of Norway, Rtd. Maj.Gen Clive Newrere of Canada and Rtd LtCol. Paul Henry Hodinge of the Netherlands. They discussed ways & means of implementing the peace processes. Mr Prabaharan said that he was happy to meet the four leaders of the monitoring teams and said he woud extend his fullest co-operation. He also wished that countries like Norway, Canada and Netherlands would help achieve stable and permanent peace in SriLanka

## Jaffna District Amatue Athletic Association Revived

The Jaffna Amatue Athletic Association (JAAA) which was defunct since 1982 was dissolved and in its place, Jaffna District Amatue Athletic Association (JDAAA) was formed in 1994 with Dr. T W. Jeyakularajah as its President. The Association organized its first Athletic meet on February 4th & 5th. Many Clubs and a few school children participated Dr. N. Ehirveersingam, veteran Athlete, and the First Tamil to participate at the Tokyo Olympics was the Chief Guest With Dr. Jeyakularajah, a Sportsman from St. John's as the President of JDAAA and Dr Ethirveerasingam in Jaffna, it is believed that sports in Jaffna will soon be revived.

We are very proud that 17 year old Davidraj of Jaffna College won the gold medal at the 5000 meters event and a bronze at the 1500 meters event.

## M.A. Velupillai Passes Away

Death occured in Vaddukoddai, of Mr.M.A.Velupillai at the early hours of February 5th. He was an old boy of Jaffna College and was loyal to his alma mater till his death. While working in the Education Department he took active part in the Colombo Branch of the Jaffna College Alumni Association. After retirement, he was involved with the Parent Body in Jaffna. He was one of the Vice Presidents of the Alumni Association and was elected twice as it's representative to the Jaffna College Board of Directors. He was still a Board Member at the time of his death. He took keen interest in the development of the College and looked into the welfare of all the teachers. He also took active part in the welfare of the community of which he was part and parcel

He always loved his teachers and fondly remembered them. He even contributed towards T. S. Openheim Memorial Prize Fund, one of his beloved teachers. Mr G. Rajanayagam, Principal,Jaffna College & Mr.S. Sivapothagnanam, Principal, Thirugnanasampanthar School paid tributes at the funeral which took place on February 5th at 2.00p.m. We extend our deepest sympathies to his bereaved wife and children

## Ven. Donald Kanagaratnam Enters Glory

We regret to record the death in Jaffna of the Ven. Dr. Donald Kanagaratnam, Arch Deacon, Jaffna of the Colombo Diocese, Church of Ceylon. He accompanied his Bishop, The Rt: Rev. Kennth Fernando on

(Continued on page 4)

# வீரமாமுனிவரின் தமிழ்ப்பணி

'தோன்றிற் புகழொடு
தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை
நன்று'
(குறள் 236)

என்ற வள்ளுவன் வாக்கிற்கு இணங்க 1680 ஆம் ஆண்டில் இத்தாலி நாட்டில் பிறந்து, தம் முப்பதாம் வயதில் தமிழ் நாடு வந்து ஏறக்குறைய முப்பத்தேழு ஆண்டுகளாகத் தமிழகத்தில் தங்கி மதப்பணி புரிந்த இயேசு சபைக்குரு ஆவார். சந்தாசாகிப்பால் பெரிதும் பெருமைப்பட்டவர், இத்தாலி, கிரேக்கு இலத்தீன் எபிரேயம் ஆகிய மொழிகளில் சிறந்த தேர்ச்சி உடையவர் தமிழ் மொழியில் ஆழ்ந்த புலமை பெற்றவர். அவர் தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டு பல திறப்பட்டதாகும்.

## 1. எழுத்துச் சீர்திருத்தம்

முற்காலத்தில் 'எ' கரத்திற்கும் 'ஓ' காரத்திற்கும் வேறுபாடு தெரியாமல் மக்கள் இடர்பட்டனர். இம் மயக்கத்தை நீக்கக்கருதிய வீரமாமுனிவர் 'எகர' 'ஒ' கரங்களில் நீண்ட புள்ளியையும், மெய் எழுத்துக்களுக்குச் சுழித்த புள்ளியையும் பயன் படுத்தி வேறுபாடு காட்டினார். இவ்வாறு இவர் இயற்றிய மாற்றமே இன்றைய 'ஏ' 'ஓ' வடிவங்களும் வழிகோலுவதாயிற்று மேலும் 'கெ, கொ' என்ற குற்றெழுத்துக் கொம்புகளை மேற் சுழித்து 'கே' 'கோ' என்று மாற்றியமைத்தவரும் வீரமாமுனிவரேயாவார்.

## 2 செய்யுள் நூல்கள்

திருக்குறளின் தெள்ளிய நயமும் சிந்தாமணியின் செழுஞ் சுவையும் கம்பராமாயணத்தின் கவியின்பமும் அவர் மனதைக் கவர்ந்தன. சிந்தாமணியைப்போல் கிறிஸ்துமதச் சார்புடைய ஒரு பெருங்காவியம் செய்ய ஆசைப்பட்டார். அவ்வாசையின் கனியே தேம்பாவணி என்னும் அருங் காப்பியமாகும். இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பரின் வரலாற்றைத் தேம்பாவணி சித்திரிக்கின்றது. சிந்தாமணியைப் பின்பற்றி எழுந்த அக்காவியத்தில் திருக்குறளின் மணம் கமிழ்கிறது; கம்பனது கவிநலம் திகழ்கின்றது; காவியப்போக்கிலும் தேம்பாவணி பல விடங்களில் கம்பரது காவியத்தைத் தழுவிச் செல்கின்றது. அந்நூலைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றுங்கால் அதைக்கேட்டு மகிழ்ந்த புலவர்கள் நம் இத்தாலிய வித்தகருக்கு வீரமாமுனிவர் என்னும் பட்டத்தைக் கொடுத்துச் சிறப்பித்ததாகக் கூறுவர். தேம்பாவணி 3 காண்டங்களையும் 3615 விருத்தப் பாக்களையும் 36 படலங்களையும் உடைய காவியமாகும். இது சீவக சிந்தாமணிக்கு இணையான காவியம் என்றார் திரு. பூரணலிங்கம் பிள்ளை அவர்கள் 'தமிழ் இலக்கியத்தில் தலை சிறந்த நான்கு காவியங்களுள் தேம்பாவணியும் ஒன்று' என்கிறார் பிஷப் கால்டுவெல்.

இதனாலேயே இக் காவியம் வாடாத பொன் மாலை என்று சிறப்பிக்கப்படுகிறது.

திருக்காவலூரின்கண் எழுந்தருளியிருக்கும் தேவ மாதாவின் மீது சந்த இன்பம் நிறைந்த 101 பாக்களைக் கொண்ட திருக்காவலூர்க் கலம்பகத்தை இயற்றியுள்ளார்.

போர்த்துக்கேய நாட்டு வேத சாட்சியான கித்தேரி அம்மாள் மீது பாமரரும் படித்து இன்புறத்தக்க 'கித்தேரி அம்மாள் அம்மானை என்ற இனிய எளிய' நூலை இயற்றியுள்ளார்.

தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னனால் துரத்தப்பட்ட கிறிஸ்தவ மக்களுக்கு அடைக்கலம் கொடுத்துக் காத்த திருக்காவலூர் தேவ மாதாவின் மேல் 'அடைக்கல நாயகி வெண் கலிப்பா'' போன்ற பல பிரபந்தங்களைப் பாடியுள்ளார் தேவாரப்பதிகம் போன்று ''கருணாம்பரப்பதிகம்'' ஒன்றையும் பாடியுள்ளார். சில வண்ணச் செய்யுட்களையும் இயற்றியுள்ளார். தமிழில் உள்ள பல நயமான நீதிநூல்களைத் தமிழ்ச்செய்யுள் தொகை என முதன் முதலாகத் தொகுத்தும் வழிகாட்டியுள்ளார்.

## (111) உரை நடை நூல்கள்

மறைகற்பிக்கும் சான்றோர்க்கென்று 'வேதியர் ஒழுக்கம்' என்னும் அரியநூலையும், கிறிஸ்தவ வேதக் கொள்கைகளை எளிதாக விளக்கும் வேத விளக்கம் என்ற மற்றோரு நூலையும் இயற்றியுள்ளார். இந்நூலுக்கு எதிர்ப்பாக லூத்தர் சபையினர் வெளியிட்ட திருச்சபைப்பேதகம் என்றநூலுக்கு மறுப்பாக 'பேதகம்மறுத்தல், 'லூத்தர் இனத்தியல்பு' என்ற இரு நூல்களை எழுதியுள்ளார். கிறிஸ்தவர்களுக்கு அறிவுபுகட்டும் எண்ணற்ற பல நிருபங்களையும் சிறு நூல்களையும் இயற்றியுள்ளார் பண்டிதரும், பாமரரும் ஒருங்கே பாராட்டுகின்ற 'பரமார்த்த குரு கதை' என்னும் உரைநடை நூல் ஆங்கிலம், பிரேஞ்சு, ஜெர்மன், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இது இந்நூலுக்கமைந்த சிறப்பாகும். தமிழில் முதன் முறையாகத் தோன்றியதலையாய ஏளன இலக்கியமும் (satire) இதுவேயாகும். இதனால் தமிழ்ச் சிறுகதையின் தோற்றுவாய்க்கு வித்திட்டவரும் இவரே என்று கூறலாம்.

## 4 மொழிபெயர்ப்புநூல்

திருக்குறளின் அறத்துப்பாலையும் பொருட் பாலையும் இலத்தின் மொழியில் மொழி பெயர்த்துள்ளார்.

## 5 இலக்கணநூல்கள்

குட்டித் தொல்காப்பியம் எனப் பலரும் கொண்டாடும் ''தொன்னூல் விளக்கம்'' என்னும் பொன்னூலை இயற்றியுள்ளார். உலக வழக்கில் காணப்படும் தமிழ் மொழி இலக்கணத்தை ''கொடுந்தமிழ் இலக்கணம்'' என இலத்தீன் மொழியில் எழுதியுள்ளார். இந்நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளனர். முனிவரின் ஆராய்ச்சித் திறத்தைப் போப் பெரிதும் பாராட்டுகிறார். கால்டுவெல் எழுதிய ஒப்பிலக்கண நூலுக்கு இந்நூல் பெரிதும் துணை புரிந்ததெனலாம்.

## 6 அகராதி நூல்கள்

தமிழ்ச் சொற்களை அகர வரிசையாகத் தொகுத்துப் பெயர், பொருள், தொகை, தொடை, என்னும் நான்கு அதிகாரங்களாசப் பகுத்துச் ''சதுரகராதி'' என்னும் அரிய நூலை எழுதி வெளியிட்டுள்ளார். வீரமாமுனிவர் இயற்றிய இவ்வகராதி நூலே பின்னெழுந்த அகராதி நூல்களுக்கெல்லாம் முதல் நூலாகவும், சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கியுள்ளது. 900 தமிழ்ச்சொற்களுக்கு இலத்தீன் மொழியில் பொருளை விளக்கி ''தமிழ் இலத்தீன் அகராதி'' ஒன்றை எழுதியுள்ளார்

போர்த்துக்கீசியம்–தமிழ்– இலத்தீன் அகராதி நூல் ஒன்றையும் இயற்றியுள்ளார்.

இவ்வாறு வீரமாமுனிவர் கிறிஸ்தவ மக்களுக்குக் காப்பியத் தந்தையாகவும், தமிழ் நாட்டிற்கு உரைநடை இலக்கிய முன்னோடியாகவும் அங்கத இலக்கிய ஆசிரியராகவும், அகராதி நூல்களின் தலைவராகவும், மொழி நூலாராய்ச்சியில் முதல்வராகவும், மொழிபெயர்ப்பு நூல்களின் வழிகாட்டியாகவும் விளங்குகிறார். ஆதலால் 'தமிழ் வளர்த்த தந்தை' எனத் தமிழுலகம் இவரைப் பாராட்டிச் சிறப்பிக்கின்றது.

பொ. அருந்தவநாதன்
B. A. (Hons)
யாழ்ப் ாணக் கல்லூரி

# செய்திச் சிதறல்

## வாதரவத்தையில் ஒளி விழா

அச்சுவேலி திருச்சபையின் கீழ் வாதரவத்தையில் இயங்கிவருகின்ற நிலையத்தில் சென்ற 17. 01. 95 செவ்வாய்கிழமை மாலை 3-00 மணிக்கு முதன் முதலாக ஒளி விழா கொண்டாடப்பட்டது.

சபைபோதகர் அருள் திரு வி எஸ். தேவகரன் அவர்களது தலைமையில் அவரது ஜெபத்துடன் இவ்விழா ஆரம்பமாகியது பின்பு தலைவர் வரவேற்புரை நிகழ்த்தினார்.

சிறப்பு நிகழ்வாக நுணாவில் தென்னிந்திய திருச்சபை போதகர் அருள் திரு T ஜெயச்சந்திரன் தலைமையில் நுணாவில் திருச்சபை வாலிபர்கள், பிள்ளைகள் ஆகியோரால் கலை நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன அருள்திரு T.ஜெயச்சந்திரன் அவர்கள் நற்செய்தியை அளித்தார்.

இவ்விழாவில் ஆதீனத்தின் சார்பில் செயற்திட்ட அலுவலர் திரு. நோயல் சுரேஷ் தம்பு' பொருளாளர் திரு எஸ். இரத்தினவேல் ஆகியோர் கலந்து கொண்டனர். திரு எஸ் இரத்தினவேல் அவர்கள் ஆதீனம் சார்பாக உரை நிகழ்த்தினார்.

வாதரவத்தை கிராமத்தைச் சேர்ந்த சுமார் 75 குடும்பங்களுக்கு உதவிப் பொருட்களை திரு எஸ். இரத்தினவேல் அவர்கள் அன்பளிப்பாக வழங்கினார்கள்.

இந்நிலையம் தொழிற்பயிற்சி நிலையமாக 1993ல் ஆரம்பிக்கப்பட்டது தற்போது இங்கு ஆங்கில அறிவு போதிக்கப்படுகிறது இவ்வருடம் இந்நிலையம் ஒரு சிற்றாலயமாகவும் மாற்றப்பட்டுள்ளது' இந்நிலையத்தில் தென்னிந்திய திருச்சபையால் நடாத்தப்பட்ட ஒரு சமய விழா இதுவே முதற்தடவையாகும்.

## நெடுந்தீவு பகற் பராமரிப்பு நிலையங்களின் ஒளி விழா

விழா 1994. 12. 17 சனிக்கிழமை மாலை 2.30 மணிக்கு நெடுந்தீவு மகாவித்தியாலய உள்ளரங்கில் ஆரம்பமானது இவ்விழாவானது இந்நிலையங்களின் நிர்வாகி வண. J ஞானப்பிரகாசம் அவர்களின் ஜெபத்துடனும் திரு S மகேஸ் ஆசிரியரின் ஆரம்பப்பாடலுடனும் ஆரம்பிக்கப்பட்டது இவ்விழாவிற்கு பிரதம விருந்தினர்களாக திரு திருமதி Y. யோகேஸ்வரன் (மாவட்ட வைத்திய அதிகாரி) சமூகமளித்தனர். செய்தியினை வண. A. C. கிறிஸ்தோபர் அடிகளார் வழங்கினார் வாழ்த்துரைகள் பின்வருவோரால் கூறப்பட்டன 1. திரு இரா சின்னத்தம்பி அவர்கள் - பிரதிக் கல்விப்பணிப்பாளர், தீவகம் 2 திரு. 'P M J அன்ரனி அவர்கள் (மகாவித்தியாலய அதிபர்) திரு. Y. சங்கரப்பிள்ளை அவர்கள் (பிரஜைகள் குழுத்தலைவர்) அவற்றினைத் தொடர்ந்து பின்வரும் நிகழ்ச்சிகளை பகற்பராமரிப்பு நிலையங்களின் ஆசிரியர்களான செல்வி இ. பவாணி, செல்வி, P. சிவதேவி' செல்வி T. சுதர்ஷினி, செல்வி V. மங்களேஸ்வரி,

(3 ம்பக்கம் பார்க்க)

நீதி ஜனத்தை உயர்த்தும் பாவமோ
எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி.

# உதயதாரகை

ஆதீன காரியாலயம், வட்டுக்கோட்டை
Estd. 1841

மலர்: 156 10- 02- 1995 இதழ்: 06

## திருச்சபையில் இறைமக்கள்

திருச்சபை ஒரு குறைவற்ற நிறைவானமை நிறுவனம் என்றும், உலகம் முழுவதும் இந் நிறுவனத்துடன் இணைந்து செயல் படுவதினாலேயே புனிதமடையுமென்ற கருத்து முன்னர் நிலவியது. ஆனால் இன்று, இக் கருத்து பொருந்தாது தவறானது என இறையியல் அறிஞர்கள் அறிவுறுத்துகின்றனர்.

அன்னாரின் கருத்துப்படி திருச்சபை உலகத்திலேயேயிருந்து, உலகத்திற்கு மீட்பின் சேவை செய்வதற்காக உழைக்கும் அருட்சாதனமாக அமைகின்றது. உலகம் திருச்சபைக்காக அல்ல, திருச்சபையே இவ்வுலகின் இரட்சணிய நிறைவுக்காக உழைக்கும் சேவைக் கருவியாக அமைய வேண்டும் என்பதே.

இக்கருத்து, திருமறையின் முக்கிய கோட்பாடுகளில் ஒன்றாகும். இதன்படி திருச்சபை தன் பணிகளை இறைவனின்திருச்சித்தத்திற்கிசைய நடைமுறைப்படுத்துவதற்கு திருச்சபையின் முதுகெலும்பாக கருதப்படும் இறைமக்களுக்கு உரிய பொறுப்புக்களையும் உரிமைகளையும் வழங்க வேண்டியது அவசியம். திருச்சபையில் பொதுவாக இறைமக்களெனக் கருதப்படும் சபையாரும் குருமாரும் - தமக்குள்ளே அனாவசிய வேறுபாடுகளை வளர்த்து, யார் உயர்ந்தது? யார் தாழ்ந்தது? என்று தமக்குள் போராடாது- ஒன்றுபட்டுத் தத்தமக்குரிய பணிகளை உண்மையாக நிறைவேற்ற முன்வரவேண்டும்.

குருமார் திருச்சபையின் அடித்தளமென்றும், சபையார் குருமாரின் பணிவிடைக்காரரென்றும் கருதிய காலம் மலையேறிவிட்டது. குருமார் செயற்படும் திருச்சபையாகவும் இறைமக்கள் (சபையார்) மௌன திருச்சபையாகவும் இருக்கின்றனரெனக் கருதுவது தவறு. குருமாருக்கும் சபையாருக்கும் இடையில் இத்தகைய வேறுபாடுகள் நீங்க வேண்டும். இறைமக்களுக்குச் சேவை செய்யவே குருமார் நியமிக்கப்பட்டுள்ளனர். குருமாரும் சபையாரும் சேர்ந்து உலகமனைத்திற்கும் சேவை செய்யவே தாம் அழைக்கப்பட்டுள்ளனர் என உணர்தல் வேண்டும்.

'மக்களுக்குச் சேவை செய்வதே மகேசன் சேவை' என்ற உயரிய கருத்தைக் குருமாரும் இறைமக்களும் முதலில் தெளிவாக உணரவேண்டும். இதனைச் சபையார் நன்கு அறிவதற்கு அவர்களுக்குக் கிரமமான பயிற்சி அளித்தல் அவசியம். வெறும் இறையியல் அல்லது திருமறை சார்ந்த விரிவுரைகள்மட்டும் போதாது- முறையான பயிற்சி அளித்தல் அவசியம். இத்தகைய பயிற்சியைப் பெற்றால் தான் அவர்கள், திருச்சபையில் தாம் ஆற்றவேண்டிய பணியின் முக்கியத்துவத்தை உணர்வார்கள். இன்றைய தேவைகள் பற்றிய விழிப்புணர்ச்சியடைந்து, பொறுப்புணர்ச்சியோடு செயலாற்ற பக்குவமடைவார்கள்.

இறைமக்கள் பயிற்சி முக்கியமானது. அதனை முறையாக நடத்த ஆதீனம் முன்வரல்வேண்டும். அப்பொழுதுதான், இறைமக்கள் இதன் காத்திரத்தை உணர்வார்கள். முறைப்படி பயிற்றப்பட்ட இறைமக்கள் தாம் வாழும் இடங்களிலுள்ள சபைகளில் மட்டுமல்ல தாம் பணிபுரியும் சமூகத்திலும் உண்மையான குடிமக்களாக நிறைவான பணியாற்ற முடியும்.

## பல உள்நாட்டு, வெளிநாட்டு பிரமுகர்கள் யாழ் விஜயம்

**கென்னத் பெர்னாண்டோ**

ஆங்கிலிக்கன் பேராயர் கென்னத் பெர்னாண்டோ அவரது மனைவி மற்றும் நான்கு பேர் கொண்ட குழுவினர் யாழ் வந்துள்ளனர். தென்னாசிய தேசிய கிறிஸ்தவ மன்ற செயலாளர் வண கலாநிதி டொனால்ட் கனகரட்ணம் வண. சர்வானந்தன், அருட்சகோதரி சந்திராணி பிரிஸ் ஆகியோர் அடங்கிய குழுவினர் யாழ் வருகை தந்துள்ளனர்.

**இரட்சணிய சேனையின் 112ம் ஆண்டு விழா**

இரட்சணிய சேனை தனது வேலையை இந்நாட்டில் தொடங்கி 111 ஆண்டுகளை முடித்து 112ம் ஆண்டு விழாவை கைதடியில் உள்ள அவர்களின் நிலையத்தில் ஜனவரி மாதம் 29ம் திகதி கொண்டாடினார்கள். பிரதம விருந்தினராக மெதடிஸ்த சபையைச்சேர்ந்த வண .S S கருணராஜ் அவர்களும் பாரியாரும் கலந்து கொண்டனர் கைதடி நிலையப் பொறுப்பதிகாரி Captin Kohia Muthusamy அவர்களின் தலைமையில் நன்றி செலுத்தும் ஆராதனை நடைபெற்றது. தென்இந்திய திருச்சபை வரணி ஊழியன் வண A V. யேசுதாசன் அருளுரை யாற்றினார். தென்னிந்திய திருச்சபை நுணாவில் ஊழியன வண. T. ஜெயச்சந்திரன் வாழ்த்துச் செய்தியை கூறினார். வண. S S. கருணராஜ் பொருட்காட்சியை திறந்து வைத்தார். ஆறு மாதத் தொழில் பயிற்சியாக தட்டச்சு, சுருக்கெழுத்து, தையல் சிகை அலங்காரம், கேக் அலங்காரம் பூச் செய்தல் முதலியவற்றை பழகி முடித்த யுவதிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. தற்காலச் சூழ்நிலையில் இரட்சணிய சேனை சேவை செய்வது மிகவும் மெச்சத்தக்கது பாலர் பாடசாலை, தொழில் பயிற்சி சிறுவர் இல்லம் முதலியவற்றை சிறப்பாக நடத்திவரும் நிலைய அதிகாரி பாராட்டுக்குரியவர் என Dr. J. நல்லநாதன் தனது உரையில் குறிப்பிட்டார்.

**நெடுந்தீவு**

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வி P. பரமேஸ்வரகுமாரி, ஆகியோரின் வழிநடத்தல்களுக்கூடாக இந்நிலையங்களின் பிள்ளைகளால் நடாத்தப்பட்டன. 1. வரவேற்பு நடனம் 2 ' ஆங்கிலப் பாடல்கள் 3. தமிழ் ஆங்கில நாடகங்கள், 4. இசையும், கதையும் 5. கோலாட்டம், உட்பட மொத்தமாக 28 நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பிரதம விருந்தினர் (மாவட்ட வைத்திய அதிகாரி) "இந்நிலையத்தின் செயற்பாடுகள் தென்னிந்தியத் திருச்சபை செய்கின்ற சிறார்களின் கல்விப் பணி மிக சிறந்தமுறையில் நடைபெறுகின்றது. என்று குறிப்பிட்டார்...

**யுத்த கண்காணிப்பு குழு:**

போர் இடை நிறுத்தத்தைக் கண்காணிக்கும் நான்கு குழுக்களுக்கும் தலைமை வகிக்கும் கனடாவைச் சேர்ந்த ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கிளைப் மியுரர், நோர்வேயைச் சேர்ந்தவர்களான ஓடின் றோம் ஜோன் எப்பிரியல்சன், நெதர்லாந்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற லெப்டினன்ட் கேணல் போல் ஹென்றி கோஸ் ஆகிய வெளிநாட்டு பிரதிநிதிகள் ஞாயிறு 9ம் திகதி யாழ் விஜயம் செய்தனர் யாழ்வந்து சேர்ந்த கண்காணிப்பு குழுவெளிநாட்டு பிரதிகளை தலைவர் பிரபாகரன் சந்தித்துப்பேசினார்.

**இலங்கை வாலிப் கிறிஸ்தவ சங்கங்களின் பிரதிநிதிகள் வருகை**

திரு. சிறியந்த சேனரட்ன, தலைவர் இலங்கை கிறிஸ்தவ வாலிப சங்கங்களின் தேசிய சபை தலைவர் திரு. அசோக வீரசிங்க, தேசிய பொது காரியதரிசி, திரு. S விஜயகுலசிங்கம் தலைமைத்துவப் பயிற்சி காரியதரிசி, திரு. அருண சாந்த நோயன்ஸ் காரியதரிசி பிள்ளைகள் அபிவிருத்திப் பொறுப்பாளர் ஆகியோர் கடந்த சனிக்கிழமை 4ஆம் திகதி யாழ் வருகை தந்தனர்.

யாழ்ப்பாணக் கல்லூரி Y.M.C.A நிர்வாகக் குழுவினரை முதலில சந்தித்து ஒட்லி மண்டபத்திலுள்ள Y.M.C A - ஸ்தாபக தகடு, சிற்றுண்டிச்சாலை, ஜோர்ஜ் ஜிம்னாசியம், Y-M.C.A கட்டடத் தொகுதி ஆகியவற்றை பார்வையிட்டு யாழ்ப்பாணக் கல்லூரி Y.M C.A நடவடிக்கைகளைப் பாராட்டி, திருப்தி கொண்டனர். அதன்பின்னா பண்டத்தரிப்பு, நவாலி, மானிப்பாய், உடுவில் வாலிப கிறிஸ்தவ சங்கங்களையும் சந்தித்து அதன் நடவடிக்கைகளையும் கேட்டறிந்து திருப்தி கொண்டனர். யாழ்ப்பாண, ஊர்காவற்துறை ஆகிய Y.M.C A க்களை யாழ் Y.M C A இல் சந்தித்ததன் பின்னர் வட பிராந்திய வாலிப சங்கத்தினர் ஒழுங்குசெய்த கிறிஸ்தவ இரவு இராப்போசனத்திலும் கலந்து உரையாற்றினர். எல்லா வாலிப கிறிஸ்தவ சங்கங்களும் ஐக்கியமாக யாழ்ப்பாணத்தில் செயலாற்றி வருவதைக் குறிப்பிட்டு வடபிராந்திய Y.M C A இணையத்தை தாங்கள் அங்கீகரிப்பதாகவும் தலைவர் திரு. சிறியந்த சேனரட்ன தனது உரையில்குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்கு வடபிராந்திய Y M.C A க்களின தலைவர் திரு எஸ் இரட்ணவேல் தலைமை தாங்கினார் இக்குழுவினர் அகதி முகாம்களை பார்வையிட்டதோடு உடனடி நிவாரணப பணிக்கு ஒரு தொகைப் பணத்தையும் கையளித்ததோடு ஒவ்வொரு வாலிப கிறிஸ்தவ சங்கங்களுக்கும் விளையாட்டு உபகரணங்களையும் அன்பளிப்பு செய்தனர்.

**அங்கிலிக்கன் குரு முதல்வர் காலமானார்**

அங்கிலிக்கன் பேராயர் கெனத் பெர்னாண்டோ குழுவினருடன் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்த அங்கிலிக்கன் சபையின் குரு முதல்வர் அருட்தந்தை கலாநிதி டொனால்ட் கனகரட்ணம் மாரடைப்பால் காலமானார். காலமான குரு முதல்வர் வவுனியாவில் 50 வருடங்களுக்கு மேல் திருப்பணியாற்றியவர். இவரது பூதவுடல் வவுனியாவிற்கு கொண்டு செல்லப்பட்டது

**The Morning Star**

Diocesan Office, Vaddukoddai 10 . 02 . 1995

## EDITORIAL

# The YMCA and the Refugee Rehabilitation

At a dinner hosted by the Regional Council of the YMCA's in the North. The General Secretary of the National Council of the YMCAs in Sri Lanka emphatically stated that the YMCA is committed to the extention"of the Kingdom of Heaven on Earth. YMCA is ecumenical and is involved in a dialogue with people of other faiths, which will draw others as well into our way of thinking This will enable us to build a just society where justice and peace reigns.

He also said that they were not solely involved in refugee rehabilitation, but there are many other items as well on the agenda. The National Council was able to convince the donors that all their money was not eaten up by feeding the refugees. The question that was racing in my mind was, should we have an item called 'Refugee Rehabilitation' on our agenda at all? Or rather, why are we still having this Refugee Problem on our soil? We all should ask ourselves. Are we not ashamed that we have refugees or the internally displaced amidst us?- a very pertinent question. People boast of their rich culture; they are proud of their 2500 years old heritage. One wonders whether our culture and heritage was responsible for this refugee problem.

We fight; we kill; we want to have dominion over others, whom we call our neighbours. We are a sophisticated nation. We are indeed, for, we use sophisticated weaponry where as our forefathers used sticks and arrows. Where is our rich culture? our heritage? Every one tries to paint a picture depicting others as savages, but all the time one hides one's savageness within. Every one tries to fpose himself as innocent as a dove can be. But all he wants is to kill and plunder others. Those who killed, bombed innocent civilians' houses, forced people out of their dwellings and prevented people from receiving their daily bread still are against the government's lifting the economic blocade. Their blood boils within, when the government wants to settle the ethnic problem.

Now, where do we- the members of the Y M C A, of various denominations of the Church-stand? Arn't we given that great commandment, 'Go ye into the world, making disciples of all nations, baptizing in the Trinitarian name (symbol of unity) and teaching what I have commanded (Love ye one another)"? If we had involved ourselves in preaching what Jesus preached, 'Love God and love others as thyself' and were successful in converting all to Christ's way of thinking, we wouldn't have had the refugee problem at all. All Christians have failed in this respect.

Today, the refugee problem has come to stay. It is our own seeking. Therefore, we have to face it Whether we like it or not the burden of feeding them has fallen on us. A colossal sum of money which, otherwise could have been used for development, is being eaten up by feeding the refugees Much more is wasted by way of military expenditure. The war mongers do not care that large sums are wasted, but rather cherish, because a war situation benefits them. But all those who are interested in the extention of the Kingdom of Heaven on earth should endeavour to end the hostile situation.

Interested parties including a few media personnel are trying to sidetract masses by highlighting trivialities But our main focus should be on the plight of these refugees. The only way we can help these poor creatures is to make the situation conducive for them to resettle in the places of their birth right. Only when they return to their sweet homes can we think of rehabilitation. Until such time the word 'Refugee Rehabilitation' is a misnomer.

Peace with dignity is the only way people can dwell in their homes undisturbed. An ideal situation is where each man lives in his home undisturbed, tends his own wineyard and eats its fruits without fear of having his birth right robbed. The main item on the agenda should therefore, be 'peace making.'

## OBITUARY

Mary Ponmany Sinnatamby passed away peacefully on September 2nd 1994 at the Scarborough Grace Hospital, Canada at the age of 83 years and her remains were interred at the Highland Memorial Gardens, North York, Ontario. She was born in 1911 at Manipay. She was the beloved wife of the late A. T. Sinnatamby of Dehiwala, (she had her entire education at Uduvil Girls' College, Jaffna) She was the daughter of late V. A. Manikavasagan and J. T. Manikavasagan (nee Asbury), mother of Dr. Arthur (Brunei) Rukmini (USA), Gora (Canada) & Seetha (Cannda), mother - in - law of Sarogini,Indran Seevaratnam, Sothy & Pathman Mills, grand mother of Anusha Visvalingam, Ishani & Tishan Mills, Debbie & Mary Margaret Sinnatamby and great grand mother of Roseanne. Only sister of late N.R. Manikavasagan.

She also leaves behind three sisters - in - law, Mrs. L. Jehoratnam (Australia), Mrs. P. Sinnatamby (India) and Dr. (Mrs) G. Barr Kumarakulasingham (Sri Lanka).

## Representatives of the National Council of Y M. C. A's visit Jaffna

Mr Sriyantha Samaratna President of the National Council of Y. M. C A's Mr. Asoka Wijeyasekera, its General Secretary, Mr Anura Shantha Nonis Secretary for Children Development, Youth and Young Adults programme, and Mr. S. Vijeyakulasingam, Secretary for leadership Development and Extension were in Jaffna, from 4th to 6th February 1995. During their short stay here they visited several Y.M.C As and saw the different projects undertaken by them (A detailed report of their visit will appear in our next issue of the morning star.)

## Obituary

**Mrs. Margret Nachchipillai**

Death occurred of Margret Nachchipillai, wife of late R. V. Kandiah at Karaveddy on January 13,1995.

She was the mother of K. E. Vijeyasingarajah (Retired Teacher, Meesalai), Late D. K. Seevaratnam, R N. Thurairatnam (Retired Teacher, Erlalai South), V. K. S Navaratnam (Regional Secretariat, Thenmarachchi, Chavakachcheri) K. V. K. Yogaratnam (Methodist Church, Kattaiveli), mother-in-law of Kanagamani, Anna Rosabella, Jeyamani, Ariamani and Mahadevi Grand Mother of Lohini,late Jeyaruban, Jeyaharan (Teacher, St. John's College), Jeyanesan (C. S. I Kudathanai) Ebanezer, Santharuban, Neomi, Anachiya, Niroshan and Mrs. Priscilla.

Funeral took place at Kattaiveli on January 14th at 3-00 p.m. The service was conducted b. Rev. B. J. Mather, assisted by Rev T. Jeyachandran and Mr. N. T. Jeyanesan. Sermon was preached byRev.S. S.Karunairajan

## Ven. Donald Kanagaratnam

( Continued from page 1)

an official visit to Jaffna. He succumed to a heart attack immediately after the confirmation service at St. John the Baptist Church, Jaffna on February 5th. His remains were removed to Vavuniya, his native place, after a service in Jaffna on February 6th.

He was a Lecturer at Pillimathalawa Theological Seminary before he was appointed Archdeacon. The people of the North lost a very senior Pastor, and a learned man in his death. We extend our deepest sympathies to the Anglican Church and his family.

Registered as a News Paper at the G P. O. Sri Lana under No. Q / J / 140 94. News Printed for the Jaffna Diocese of the Church of South India at the American Ceylon Mission Press, 182, 1st Cross Street, Jaffna on Friday the 10th of February 1995 and published by Mr. T. Tambiappa, Diocesan of fice, Vaddukoddai.